www.tamilarangam.net

# ஈழமக்களின் போர்க்கரங்களைப் பலப்படுத்துங்கள்
# ஈழப் போராட்டத்துக்கு நிதி உதவி வழங்குங்கள்

சிங்கள இனவாத அரசின் இரத்தவெறிகொண்ட இராட்சத மிருகங்கள் எமது அன்னை பூமியான ஈழத்தில் நாள்தோறும் நிகழ்த்தும் மனித வேட்டைகள், அத்துமீறல்கள், அவமதிப்புகள், மனித நாகரீகங்கள் மீது ஆறாத கொப்புளங்களை ஏற்படுத்தி வருகின்றன.

- வயல் வரப்புகளில், தெரு ஓரங்களில், மலைமுகடுகளில் உருக்குலைந்த தமிழர்கள் உடல்கள் இரத்தச்சேற்றில் வீசப்பட்டுக் கிடக்கின்றன.
- ஆயிரக்கணக்கான தமிழ்ப்பெண்கள் ஆக்கிரமிப்புப் படைகளால் பலாத்காரப் படுத்தப்பட்டு, எதிர்காலக் கனவுகள் சிதைக்கப்பட்டு நிற்கிறார்கள்.
- தமிழர்கள் வாழும் பூமியை விழுங்கிக்கொள்ள, நாடற்ற மக்களாக்கி அழித்தொழிக்க திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஆக்கிரமிப்பாளர் மேற்கொண்டு வருகின்றனர்.
- "பயங்கரவாதிகள்" என்ற முத்திரை குத்தப்பட்டு ஆயிரமாயிரம் ஈழத்து மக்கள் சிறீலங்கா வதைமுகாம்களில் தொற்று நோய்களுக்கிடையே வாடுகின்றனர்.
- ஈழ மக்களின் போராடும் ஆற்றலைப் பலவீனமாக்கிட உணவுப் பொருட்களையும், மருத்துவ வசதிகளையும் சிங்கள இனவாத அரசு தடுத்து நிறுத்தியுள்ளது.
- இலட்சக் கணக்கான ஈழ மீனவர்கள் தொழில் வாய்ப்பை இழந்து வாழ்விடங்களைப் பறிகொடுத்து நடுவீதியில் நிற்கின்றனர்.
- ஈழத்தில் வாழும் தமிழ்ப்பேசும் மக்கள் இனிய வாழ்க்கைக்காக, பிரகாசம் மிக்க சுதந்திரத்துக்காக அடிமைகளாய் அழுந்தித் தேய்ந்த மண்ணில் ஆயுதம் ஏந்தி விடுதலை வீரராய் அணிவகுத்துள்ளனர்.

அன்பிற்கினிய ~~இந்திய~~ தமிழ் மக்களே! போராடும் ஈழத்தை நேசிக்கும் அன்பு நாட்டின் அருமை மக்களே! கடந்த காலங்களில் நீங்கள் எம்மீது காட்டிய பரிவும், வாஞ்சையும் எங்கள் போராட்டத்துக்கு வலுவூட்டியது. நாங்கள் அநாதைகள் அல்ல என்கின்ற உணர்வை ஏற்படுத்தியது. விரும்பிகாண்டெழும் எமது போராட்டத்துக்கு மேலும் மேலும் உங்கள் பேராதரவு பெருகிட வேண்டும்.

உங்களை நாடி உதவிதேடி வரும் எமது போராளிகளுக்கு பணமாக,



ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப்படை (PLA)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**உணவாக, உடைகளாக வாரி வழங்குங்கள்**
**எமது போர்க்கரங்களைப் பலப்படுத்துங்கள்**

எமது அன்னை பூமியில் இருந்து ஈவிரக்கமற்ற சிறீலங்கா சிங்கள பாசிச அரசின் படுகொலைப் படைகளை துடைத்தழிக்கும் வீரமிக்க ஈழ விடுதலைப் போராட்டம் வெற்றிபெற உதவுங்கள்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பெரும் உதவியுடன் எம்மை ஒழிக்க சிங்களப் படுகொலை அரசு தனது ஆயுதங்கள் அனைத்தையும் கூர்மைப்படுத்துகிறது. சிறீலங்கா அரசுக்கு முட்டுக் கொடுக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் இலங்கைத் தீவிலிருந்து விரட்டியடிக்கின்ற பணியையும் எங்கள் தோள்களில் சுமந்து கொண்டிருக்கிறோம்.

கடினமானதும், உறுதியானதுமான எமது போராட்டப் பாதையில் நீங்கள் வழங்கும் சிறு உதவியும் எம்மை உந்துதல் பெறவைக்கும். ''சிறு பொறி பெருங் காட்டுத்தீயை உருவாக்கும்'' என்பதுபோல் உங்கள் ஒவ்வொருவரினது உதவியும் எமக்குப் பெரும் வலிமைத தந்திடும்.

***எமது புனித பூமியை***
***பாசிச எதிரிகள்***
***சிதைக்கவிடோம்.***
***அன்னை பூமியின்***
***மேனியில்***
***அந்நியர் தடங்கள்***
***நிலைக்க விடோம்.***



***எமது துப்பாக்கிகள் அனைத்தும் எதிரியை நோக்கியே !***

## நிதிமிகுந்தவர் பொற்குவை தாரீர்!
## நிதிகுறைந்தவர் காசுகள் தாரீர் !

தொடர்புக்கு :
**ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம்**
**(EPIC)**
**20, முதல் தலைமைத் தெரு**
**ஐக்காரியா குடியிருப்பு**
**ஜாபர்மேடு, சென்னை-600 094**

---

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)**

---

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்